S.M.Ahamed Lebbe [(1)], Miss. M.F. Fazeela [(2)]

# வறுமையும், சமூக தாக்கங்களும் தொடர்பான ஒரு பகுப்பாய்வு: (சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியை மையப்படுத்திய ஆய்வு)

1. Dept.of Social Sciences ,South Eastern University of SriLanka, Oluvil, SriLanka. smahamed08@gmail.com
2. Student of Dept.of Social Sciences,South Eastern University of SriLanka, Oluvil, SriLanka. fazeeseu@gmail.com

**அறிமுகம்:**

பல தசாப்தங்களாக இன்றும் உலகளாவியரீதியில் பேசப்பட்டு வருகின்ற பிரச்சினைகளில் ஒன்றுதான் வறுமையாகும். இவ்வறுமையானது மிகவும் பழமைவாயந்ததும் விசேடமாக மூன்றாம் உலக நாடுகளில் பல விதமான நோய்களை உருவாக்கக்கூடிய ஒரு வைரசாகவும் விளங்குகின்றது. (Tazoacha Francis, 2001) அவ்வகையில் ஒரு நாட்டின் சமூக நலனிலும் பொருளாதார விஸ்தரிப்பிலும் வறுமையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். இதற்கிணங்க வறுமை மற்றும் அதனுடைய சமூக பொருளாதார பாதிப்புக்களை அறிதலானது இன்று மிகத்தேவைப்பாடுடையதொன்றாக காணப்படுகின்றது.

வறுமை என்பது மகிழ்ச்சியில் குறைவை ஏற்படுத்தக்கூடியதும், சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு தேவையான அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அளவிற்கு மிகக்குறைந்த வருமானத்தை கொண்டு காணப்படுதலாகும். மேலும் வறுமையானது குறைவான உடற்சுகாதாரம் மற்றும் சுத்தமான குடிநீர் சிறப்பான கழிவகற்றல் வசதி போன்றவற்றை பெற முடியாமலும் பௌதீக பாதுகாப்பற்ற நிலையினை கொண்டிருத்தல், கருத்து தெரிவித்தலில் சுதந்திரமற்ற நிலைமை மற்றும் ஒருவருடைய வாழ்க்கையை சிறப்பாக்கக்கூடிய அனைத்து சந்தர்பங்களையும் கொள்ளளவையும் போதுமான அளவு கொண்டிருக்காமை வறுமை எனப்படும் *(Central Bank, 2012)* வறுமையானது மனிதனின் ஆற்றல் மற்றும் கண்ணியம், ஒழுக்கம் போன்றவற்றை அழித்து விடுகின்றது. இவ்வறுமையானது மனிதனை இழிவு நிலைக்கும், கேவலத்திற்கும் உள்ளாக்குவதுடன் ஒழுக்கக்கேடான செயல்களில் மூழ்க வைத்து மனிதர்களை குற்றங்கள் புரியவும் தூண்டுகின்றது.

உலக உணவு விவசாய தாபன அறிக்கைக்கிணங்க (2012) உலகின் மொத்த சனத்தொகையில் 1/8 பகுதியினர் அல்லது 870 மில்லியன் மக்கள் வறுமையினால் பாதிக்கப்படுகின்றனர். இத்தகைய வறுமையின் காரணமாக உலகில் குறை போசனையினால் அதிக சிறுவர்கள் மரணமடைகின்றனர். இதனால் வருடாந்தம் பசி பட்டினியால் மாத்திரம் 5 மில்லியன் சிறுவர்கள் இறக்கின்றனர். அத்துடன் மலேரியா போன்ற தொற்று நோய்களுக்குள்ளாகி பாதிக்கப்படுபவர்கள் நாளுக்குநாள் அதிகிரத்துக்கொன்டு வருகின்றன *(World Hunger's Report, 2012)*

ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட மனித அபிவிருத்தி அறிக்கை (2011)க்கிணங்க இலங்கையின் மனித அபிவிருத்திச்சுட்டியானது (HDI) 189 நாடுகள் மத்தியில் 97வது இடத்தில் காணப்பட்டபோதும் இலங்கை மக்களில் 15 சதவீதத்தினர் ரூபா 3087ஐ மாத வருமானமாக கொண்டு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அதேவேளை, கினிகுணகம் 0.36 ஆகக்காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் *(Central Bank, 2012).* இருப்பினும் வறுமைக்கான ஆள்வீதச் சுட்டியானது 2006/2007ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 15.2 இலிருந்து 2009/2010ம் ஆண்டில் 8.9 ஆக வீழ்ச்சியடைந்து காணப்படுவதானது வறுமையின் குறைப்பு நிலையை உணர்த்துகிறது (*Department of Census and Statistic, 2010,2011)* இலங்கையைப் பொறுத்தவரையில் காணி இல்லாத தொழிலாளர்கள், கூலி விவசாயிகள், சிறிய மற்றும் குடிசை கைத்தொழிலாளர்கள், சாதாரண தொழிலாளிகள், வீட்டுத்தொழிலாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகள் போன்றோர்களே கூடுதலாக வறுமைக்குட்படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இவ்வறுமையானது சமூகத்தின் குழப்பத்திற்கும் அச்சுறுத்தலிற்கும் பிரதான காரணியாக அமைவதைக் காணலாம். ஆபிரிக்க நாடுளில் மதுபாவனை மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் ஆபத்தான தொழிலில் ஈடுபடுவதனால் பாதுகாப்பற்ற வாழ்க்கையினையும் அனுபவிக்கின்றனர். அத்துடன் அதிகமான மக்கள் பாதுகாப்பற்ற குடிநீர் மற்றும் குடியிருப்பு வசதிகளின் காரணமாக தொற்று நோய்களிற்குள்ளாகி மரணமடைய நேரிடுகின்றது. இவ்வறுமையானது வருமான சமமின்மையை நாட்டில் மேலும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்தியை பாதிக்கும் விடயமாக கொள்ளப்படுகின்றது. அத்துடன் சிறுவர்களிடையே கெட்ட ஒழுக்கக்கேடான பண்புகள் வளர்வதற்கும் இவ்வறுமை துணைபுரிகின்றது *(Research for Social and Economic Development, 2013)*

இத்தகைய வறுமைப்பிரச்சினையானது இலங்கையின் அம்பாரை மாவட்டத்திலுள்ள முஸ்லீம்கள் செறிந்து வாழும் பிரதேசமான சம்மாந்துறைப் பிரதேசத்திலும் காணப்படுகின்றது. இப்பிரதேசமானது 71043 மக்கள் தொகையையும் 51 கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கி காணப்படுகின்றது. சம்மாந்துறை பிரதேசத்தில் இத்தகைய வறுமையானது இளையோர்களின் மீதும் பெரியோர்களின் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்தியிருக்கின்றமை உணரப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதேசத்தின் தொழில் நிலையில் சேவைத்துறை மற்றும் ஏனைய துறைகளின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற மக்களில் 4751 பேர் விவசாயத்தை தனது ஜீவனோபாய தொழிலாக மேற்கொள்கின்ற அதே வேளை 2242 பேர் அரச ஊழியர்களாகவும் கடமை புரிகின்றனர். அத்துடன் கூலித்தொழில், சிறுகைத்தொழில், கால்நடை வளர்த்தல், கடைகள் நடாத்துதல் , செங்கல் உற்பத்தி என பல்வேறு தொழில் நிலைமைகள் இங்கு காணப்படுகின்றன. மேலும் இப்பிரதேசத்தில் வாழும் குடும்பங்களின் மாத வருமான பரம்பலில் 75% ஆனவர்கள் 5000 ரூபாவிற்கு குறைவான வருமானம் பெறுபவர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. *(Divisional Secretariat, 2012)* இதன்பின்னணியில் சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் வறுமைக்கான காரணங்களை அறிவதுடன் அதனால் சமூகத்தில் ஏற்பட்டு வரும்

பல்வேறு தாக்கங்களையும் அறியும் நோக்கிலேயே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு Literature Review:

வறுமையும், அதனால் ஏற்படும் சமூக தாக்கங்களும் தொடர்பான பகுப்பாய்வுகள் தொடர்பாக இலங்கை உட்பட பலநாடுகளிலும் வேறுபட்ட காலப்பகுதிகளில் பல ஆய்வாளர்களினால் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வறுமையானது குறித்த சமூகத்தில் பல சமூக, பொருளாதார தாக்கங்களினை ஏற்படுத்துகின்றன. அந்தவகையில் Mahmood Hazan khan (2000) குறிப்பிடுகையில் ஒரு சமூகத்தின் வறுமையால் பெண்களும் சிறுபான்மை மக்களும் அதிகமாக பாதிப்படைகின்றனர். மேலும் நகர்த்துறை வாழ் மக்களை விட கிராமத்துறைவாழ் மக்கள் அதிகம் வறுமையினால் பாதிக்கப்படுகின்றனர். இவர்கள் அதிகமாக விவசாயம், மீன்பிடி, காட்டுத் தொழில் மற்றும் சிறிய வகை கைத்தொழில்கள் மற்றும் ஏனைய சேவைகளை புரிகின்றனர். மேலும் கிராமப்புறமக்களின் வறுமையானது அம்மக்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் நிலஉடமை போன்றவற்றை பாதிப்பதுடன் ஏனைய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கும் இட்டுச்செல்கின்றது. அத்துடன் அரசியல் உறுதியின்மை மற்றும் இன,மத,பால்ரீதியாக, மக்கள் கூறிடப்படல், நியாயமற்ற முறையில் நிலம் மற்றும் ஏனைய வளங்கள் பகிரப்படல், இயற்கை காரணிகள், தங்கி நிற்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் பொருளாதார திட்டங்கள் கிராமப்புறத்தை தவிர்த்து மேற்கொள்ளப்படுதல் போன்ற காரணங்களினால் கிராமத்துறையின் அபிவிருத்தி பாதிப்புற்று மேலும் வறுமையை தீவிரப்படுத்துகின்றது எனக்குறிப்பிடுகின்றார்.

வறுமை குறித்து Zahid Shahab Ahamed (2005), குறிப்பிடுகையில் நீண்டகால வறுமைநிலையானது குடும்பங்களினை உயர் அழுத்தத்திற்கு உள்ளாக்குவதனால் இவ்வறுமையானது சிறுவர்களின் ஆளுமை விருத்திக்கு தடையாக அமைவதுடன் குடும்பத்தில் சிறுவர்களினை பெற்றோர்களிடமிருந்து தூரமாக்கும் விடயமாகவும் கொள்ளப்படுகின்றது. மேலும் சமூகத்தில் வறுமை தோற்றம் பெறுவதற்கு வேலையின்மை அதிகரித்து காணப்படுதல் பிரதான காரணியாக அமைகின்ற அதேவேளை, சிலர் இனரீதியாக, சமூக வகுப்புக்களாக வகுக்கப்பட்டு காணப்படுவதனால் பிறக்கும்போதே வறுமையை முகங்கொள்கின்றனர். முழுமையாக நோக்கின் வறுமையானது ஒரு குடும்பத்தில் சிறந்த ஓட்டத்திற்கு தடையாக அமைந்து பெற்றோர்களின் கடமைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு இடையூறாக அமைகின்றது எனக்குறிப்பிடுகின்றார்.

பெற்றோர்களின் கவனிப்பின்றி காணப்படும் சிறுவர்களின் 10 சதவீதமானவர்களை ஆய்விற்குட்படுத்திய Ross et al (1998a) என்பவர், இவர்களில் 70 சதவீதமான சிறுவர்கள் கல்வியிலும் சிறந்த வெளியீட்டைத்தரவல்ல திறமைகளிலும் மிகவும் அடிமட்ட நிலையில் காணப்படுவதுடன் எதிர்மறையாகவும் செயற்படுவதாக குறிப்பிடுகின்றார். என்றாலும் Petrice et al, (2008) என்பவரின் ஆய்வு வறுமையானது இளவயதிலேயே சிறுவர்களின் அபிவிருத்தியையும் கல்வி வெளியீட்டையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பதாக குறிப்பிடுகின்றது.

வறுமையானது தாய்சேய் நலனிலும் பாதிப்பினை ஏற்படுத்துவது மாத்திரமன்றி குறைவான இடையையுடைய சிறுவர்களின் உருவாக்கத்திற்கும் தாய் வழிக்கவனிப் பின்மையால் சிறுவர்களிடையே ஏற்படும் தீங்கான பழக்கவழக்கங்கள் (புகைத்தல்) உருவாவதற்கும் கர்ப்பினித்தாய்மார்களின் குறைபோசாக்கினால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்த சிறுவர்கள் சமூகத்தில் தோற்றம் பெறுவதற்கும் ஏதுவாய் விளங்குகின்றது (Griggs and Robert Walker ,2008) அமெரிக்காவில் வறுமை தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட Gunn and Duncan (1997) என்வர்களின் ஆய்வானது வறுமையின் காரணமாக சிறுவர்களில் 57.4 வீதமானவர்கள் பழக்கவழக்கங்களில் மாறுபட்டவர்களாக விளங்குவதாகவும் 16.4 வீதமான சிறுவர்கள் பாடசாலை செல்லாதவர்களாகவும் காணப்படுவதாக குறிப்பிடுகின்றது. அத்துடன் 2500 கிராம் நிறைக்குக் குறைவான குழந்தைகள் பிறப்பதற்கும் அடிப்படையாக அமைவது வறுமை என அவர்கள் தெரிவித்துள்ளனர்..

இருப்பினும் Frederiction (2006) குறிப்பிடுகையில் வறுமையின் காரணமாக தாய்மார்கள் தங்களது குறைந்த வருமானத்தினை சிறுவர்களிற்காக செலவிடுவதனைவிட்டும் உணவு மற்றும் வீட்டுத்தேவைக்காக செலவிடுகின்ற அதேவேளை, குறைந்த வருமானமுடைய மக்கள் தரமான வீட்டுவசதியையோ, பாடசாலை வசதியையோ, உட்கட்டுமான வசதியையோ அனுபவிக்க தவறுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றார்.

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வுக்குத் தேவையான தரவுகள் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதன்மைத் தரவுகள் நேர்காணல் மூலமும், ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துகள் மூலமாகவும் பெறப்பட்டன. அத்துடன் மேலதிக தரவுகள் ஆய்வாளர்களினால் ஆய்வுக்களத்திற்கு நேரடியாகச்சென்று அவதானத்தில் ஈடுபட்டதன் மூலமும் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த முடிவுகளைப் பெறும் நோக்கில் ஆய்வுப்பிரதேசத்தில் அரசினால் வழங்கப்படும் சமூர்த்தி உதவித்தொகை பெறும் பயனாளிகளை மாத்திரமே உள்ளடக்கி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஆய்வுப்பிரதேசத்தில் வறிய மக்கள் செறிந்து வாழும் 15 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து மாத்திரமே மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் ஆய்வு பிரதேசத்திற்கு நேரடியாகச்சென்று நோக்க மாதிரி நுட்ப முறையின் (Purpose sampling) அடிப்படையில் 60 சதவீதமான மாதிரிகள் (80 குடும்பங்கள்) ஒழுங்கமைக்கப்பட்ட வினாக்கொத்துகள் வழங்கப்பட்டும், ஏனைய 40 சதவீதமான குடும்பங்கள் (55 குடும்பங்கள்) நேர்காணலுக்கும் உட்படுத்தப்பட்டனர். அத்துடன் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் கிராம சேவகர்கள் 5 பேரும் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் 5 பேரும் விசேட கலந்துரையாடலிற்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நேர்காணலுக்குட்படுத்தப்பட 55 குடும்பங்களும் பின்வருமாறு தொழில்ரீதியாக பாகுபடுத்தப்பட்டு நேர்காணல் இடம்பெற்றன.

**அட்டவணை – 01**
**நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்கள்**

| தொழில் | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| செங்கல் உற்பத்தி தொழிலாளர்கள் | 10 |
| கூலி விவசாயிகள் | 15 |
| சுயதொழிலில் ஈடுபடுவோர் | 05 |
| வெளிநாட்டில் தொழில்புரிவோர் | 10 |
| மீன்பிடி தொழிலாளிகள் | 05 |

| | |
|---|---|
| கல்லுடைத்தல் தொழில் மேற்கொள்பவர்கள் | 05 |
| ஏனையவர்கள் | 05 |
| **மொத்தம்** | **55** |

மேலும் சுமார் 35 குடும்பங்களினை சந்தித்தும் (case study) தகவல்கள் பெறப்பட்டன. இதுதவிர ஆய்வுக்குத் தேவையான இரண்டாம் நிலைத்தரவுகளானது, சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு, அரச சார்பற்ற நிறுவனங்களின் புள்ளிவிபரங்கள் மற்றும் சர்வதேச தனியார் மற்றும் அரசசார் நிறுவனங்களின் உத்தியோக பூர்வ இணையத்தளங்களில் இருந்தும் பெறப்பட்டன. மேற்படி தரவுகள் யாவும் SPSS எனும் கணணி மென்பொருளை பயன்படுத்தி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்:**

ஆய்வுப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையில் 38.35 சதவீதமானோர் (8233 குடும்பங்கள்) சமுர்த்தி உதவித்தொகை பெறுவோராகும். *(Divisional Secretariat, 2012)* இவ்வகையில் இவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களாக கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் ஆய்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆய்வுப்பிரதேச மக்களின் வருமானம் மற்றும் வறுமை நிலையை பின்வரும் அட்டவணை 1 யின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.


**அட்டவணை - 02**
**சம்மாந்துறை பிரதேச செயலகப் பரிவில் மக்களின் வருமான விபரம், *2012***

| மாதாந்த வருமானம் (ரூபா) | குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3000 > | 5833 |
| 3001 - 5000 | 5215 |
| 10001 - 25000 | 3308 |
| 25001 - 50000 | 928 |
| 50001 – 100,000 | 163 |
| 100,000 < | 21 |

*மூலம்: சம்மாந்துறை பிரதேச செயலகம் - 2012*

மேற்படி தரவிற்கிணங்க 5,833 குடும்பங்கள் தீவிர வறுமையின் கீழும், 5,215 குடும்பங்கள் சாதாரண வறமையின் கீழும் வாழ்கின்றனர். அத்துடன் முதன்மைத் தரவுகள் மூலம் பெறப்பட்ட தரவுகளிற்கிணங்க வறுமையானது அதிக அளவில் பரம்பிக்காணப்படுவதற்கான காரணங்களை அறிந்து கொள்ள முடிந்தது. அதற்கிணங்க, பின்வரும் வட்டவரைபானது சம்மாந்துறைப்பிரதேசத்தின் வறுமைக்கான காரணங்களை விளக்குகின்றது.

**வரைபு – 1**
**சம்மாந்துறைப் பிரதேசத்தின் வறுமைக்கான காரணங்கள்**




மேற்படி வரைபிற்கிணங்க, 50 சதவீதமான குடும்பங்களின் வறுமைநிலைக்கு வேலையின்மையே பிரதான காரணமாகவும் 15 சதவீதமான குடும்பங்களின் வறுமைக்கு சிறு கைத்தொழில் மற்றும் விவசாயத்தில் ஏற்படும் நட்டங்களே வறுமைக்கான பிரதான காரணியாக கண்டறியப்பட்ட அதேவேளை

மேலும் 15 சதவீதமான குடும்பங்களின் வறுமைக்கு தொடர்ந்தேர்ச்சியான கடன் அழுத்தங்கள் காரணமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 10 சதவீதமான குடும்பங்களில் குடும்ப அங்கத்தவரகளின் எண்ணிக்கையில் ஏறபட்ட அதிகரிப்பே காரணமாக அமைகின்றது. இதுதவிர 5 சதவீதமான குடும்பத்தினர் தங்களது கணவன்மார்களின் இறப்புக்களின் பொருட்டே தாங்கள் வறுமைநிலைக்கு உட்பட்டதாக குறிப்பிடும் அதேவேளை மிகுதியான 5 வீதக்குடும்பத்தினரும் பெண்பிள்ளைகளுக்கு சீதனம் வழங்கியதன் காரணத்தினால் தாங்கள் வறுமையுற்றதாக குறிப்பிட்டனர்.

மாதிரிக்குட்படுத்தப்பட்ட அனைவரதும் கூற்றிற்கிணங்க வாழ்க்கைச்செலவில் ஏற்பட்டு வரும் அதிகரிப்பின் காரணமாக தாங்கள் மேலும் இக்கட்டான நிலைக்குட்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் களஆய்வில் பங்கேற்ற மாதிரிகளில் அரைவாசிப்பேரின் கூற்றிற்கிணங்க, இவர்கள் அதிகமாக வருமானம் போதாமையின் காரணமாக பெற்ற கடன்களிற்கு அதிகவட்டி செலுத்தியதன் காரணத்தினால் அதிக வறுமைக்குள்ளானதாகவும் தெரியவந்தது. இத்தகைய வறுமைநிலையினால் இம்மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். பொதுவாக எந்தவொரு பிரச்சினையும் பலவகையான விளைவுகளை ஏற்படுத்துவதைப்போன்றே, ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறைப்பிரதேசத்திலும் இத்தகைய வறுமையானது பல்வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தியுள்ளமையானது தரவுகளின் மூலம் அறியக்கூடியதாயிருந்தது.

மேலும் இவ்வாய்வின் முடிவிற்கிணங்க வறுமையினால் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவீதமானோர் தங்களது உற்றார் உறவினரிடமிருந்தும், சமூகத்திடமிருந்தும் வறுமையின் காரணமாக ஒதுக்கப்படுவதாகவும் அதனால் தாங்கள் உளரீதியான பாதிப்புக்குட்பட்டிருப்பதாகவும் கூறினர். எனினும் இவர்களில் அதிகமானோர் பெண்களாவர். மேலும் இவரகளுள் கூலி விவசாயிகள், செங்கல் உற்பத்தியாளர்கள் மற்றும் சிறுகைத்தொழிலில் ஈடுபடுவோரும் உள்ளடங்குகின்றனர். அதிகளவு வறுமைக்குள்ளான குடும்பங்களில் காணப்படும் சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அடிப்படை விடயங்களிலும் வறுமையின் தாக்கம் பிரதிபலிப்பதை இவ்வாய்வின் மூலம் அறியக்கூடியதாயிருந்தது. அந்தவகையில் கூலி விவசாயம், செங்கல் உற்பத்தி மற்றும் சிறுகைத்தொழிலாளர்கள் தங்களது பிள்ளைகளை கல்விசார் செயற்பாடுகளின் பக்கம் தூண்டுவதை விட்டும் தொழில்சார் செயற்பாடுகளின் பக்கம் ஈடுபடுத்துவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதன் விளைவினால் இப்பிரதேசங்களில் சிறுவர் ஊழியம் மிகைத்துக் காணப்படுவதை அறிய முடிந்தது. மேலும் பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதை பின்வரும் தகவல் சுட்டிக்காட்டுகிறது. சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் 2011ம் ஆண்டின் மூலவளத்திரட்டின் அறிக்கைக்கிணங்க 1755 சிறுவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகியுள்ளனர். இத்தகைய நிலைமைக்கு 80 சதவீதம் வறுமையின் கொடுமையே பிரதான காரணமாகும்..

ஆய்வுப்பிரதேசத்தில் வறுமையானது சிறுவர்களின் கல்வியில் மாத்திரமன்றி சுகாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்கள் தங்களது இயலுமைக்கு மேல் தொழில்முயற்சிகளில் ஈடுபடுவதனால் மாத்திரமன்றி சுகாதாரமான இடஅமைவு இன்மை போன்ற

நிலைமைகளினாலும் சுகாதார ரீதியில் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். வறுமைக்குட்படுத்தப்பட்ட குடுமபங்களில் 40 சதவீதமான சிறுவர்களின் பழக்கவழக்கங்கள், எண்ணங்கள் மற்றும் சிந்தனைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய சிறுவர்கள் பாடசாலை செல்லாது, சமவயதுக்குழுக்களுடன் தெருவோரங்களில் சுற்றித்திரிவது மட்டுமன்றி பீடி, சிகரட் புகைத்தல் போன்ற இழிவான விடயங்களிலும் ஈடுபடுகின்றனர். மேலும் இவர்களின் இந்நிலமைக்கான காரணம் பற்றி ஆராயப்பட்டபோது, வறுமையினால் கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழில்களுக்காக சென்ற சிறுவர்களே இவர்கள் என்பதும் மேலும் தொழில்செய்வதற்காக சென்ற இடங்களிலேயே இவர்கள் இத்தகைய நிலைமைக்கு பழக்கப்படுத்தப்பட்டனர் என்பதும் அறியக்கிடைத்தது. மேலும் இவ்வாய்விற்கிணங்க வறுமை காரணமாக பாதிக்கப்பட்டவர்களில் உடல், உள ரீதியாக அதிக பாதிப்பிற்குட்படுபவர்கள் பெண்களாகும். இத்தகையேரின் பங்களிப்பு 75 சதவீதமாகும்.


ஆய்வுப்பிரதேசத்தின் வறுமையின் பிரதான சமூக தாக்கமாக அடையாளம் காணப்பட்ட மற்றுமொரு விடயம் பெண்கள் தொழில்வாய்ப்பிற்காக மத்தியகிழக்கு உள்ளிட்ட பல நாடுகளிற்கு செல்வதாகும். இங்கு பெண்களின் தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் வீதமானது வருடா வருடம் அதிகரித்து வருவதைனை சம்மாந்துறைப் பிரதேச செயலகத்திடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் மூலம் கண்டறியப்பட்டது. பொதுவாக பெண்க அறிக்கை மூலம் அறிந்துகொள்ளலாம். இவ்வாறு தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு செல்வதற்கான பிரதான காரணியாக வறுமை காணப்படுவதோடு இச்சமூகத்தில் காணப்படும் சீதனப்பழக்க வழக்கமும் இதற்கு முக்கிய காரணியாக பங்குவிகிப்பதை அறியக்கூடியதாக உள்ளது. இத்தகைய பெண்கள் வெளிநாடு செல்லும் செயற்பாடானது அப்பெண்ணிண் பிள்ளைகள் மற்றும் கணவன் உட்பட அனைவரினதும் சீரழிவிற்கு காரணமாக அமைகின்றது.

பெண்கள் வெளிநாடு செல்லும் குடும்பத்தில் காணப்படுகின்ற மூத்த பெண்பிள்ளை தனது கல்வியை இளக்க நேரிடுவது மட்டுமன்றி தாயின் ஸ்தானத்திலிருந்து குடும்பப்பொறுப்பை இளவயதிலேயே சுமக்கவேண்டிய நிலைக்கு ஆளாகின்றது. மேலும் தொழில்வாய்ப்பிற்காக பெண்கள் வெளிநாடு சென்ற குடும்பங்களில் 65 சதவீதமான குடும்பங்களிலுள்ள குடும்பத்தலைவர்கள் வருமானத்தை ஈட்டும் எந்தவொரு தொழிலிலும் ஈடுபடாமலும், வெளிநாட்டிலிருந்து உழைத்து அனுப்பும் பெண்ணின் வருமானத்தில் தங்கிவாழ்வது மட்டுமன்றி அப்பணத்தில் போதைவஸ்துக்களை கொள்வனவு செய்வதுடன் ஊதாரித்தனமாகவும் செலவிட்டும் வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் வறுமைக்குட்பட்ட குடும்பங்களின் பிள்ளைகளின் எண்ணிக்கையில் 55 சதவீதமான சிறுவர்கள், குடும்பத்தில் காணப்படும் வறுமையின் காரணமாக பெற்றோர்கள் அடிக்கடி பிணக்குகளிற்குள்ளாவதாகவும், இதனால் இவர்களது கல்வி, உடல், உளச்சுகாதாரம், மற்றும் ஏனைய நலன்களில் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிட்டனர். அத்துடன் ஏறத்தாள 95 வீதமான பெற்றோர்கள் தங்களது உணவு மற்றும் ஏனைய தேவைகளை தியாகம் செய்து தங்களது பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுத்து வறுமையின் கோரப்பிடியிலிருந்து பிள்ளைகளை காக்கும் நோக்கில்

செயற்படுவதனை காணமுடிகின்றது. இத்தகைய வறுமையானது எவ்வாறு பிள்ளைகளையும் குடும்பத்தையும் பாதித்து அதன்மூலம் முற்றுமுழுதாக சமூகத்தையும் பாதிப்படையச்செய்கின்றது என்பதனை Patrice et al (2008) என்பவர்களின் பின்வரும் வரைபு புலப்படுத்துகிறது.

**வரைபு – 2**
**சிறுவரகள்மீதான வறுமையின் தாக்கம் குறித்த பாய்ச்சல் மாதிரி**




*Transactional model of the effects of poverty on children*

Source: Patrice et al (2008)

மேற்படி வரைபிற்கிணங்க சமூகத்தின் எதிர்கால தலைவர்களாகிய சிறுவர்கள் இத்தகைய வறுமையின் காரணமாக பாரிய தாக்கமடைதலானது கவலைதரும் விடயமாக கொள்ளப்படுகிள்றது. அந்த வகையில் இத்தகைய நிலையிலிருந்து பிள்ளைகளையும் சமூகத்தையும் பாதுகாப்பது மிகவும் அவசியமான விடயமாக கொள்ளப்படுகின்றது.

**முடிவுரையும் விதந்துரையும்:**

வறுமையானது மக்களின் உள்ளங்களிலும் உணர்வுகளிலும் மாற்றத்தை கொணரக்கூடியதாக காணப்படுவதனால் உலகளாவிய ரீதியில் பேசப்பட்டுவரும் ஒரு பாரிய பிரச்சினையாக திகழ்கின்றது. பொதுவாக அபிவிருத்தி அடையாத மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பல தசாப்தங்களாக பாரிய பிரச்சினையாக தோற்றம் பெற்று வருகின்ற இவ்வறுமையானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் பாதிக்கின்ற விடயமாக காணப்படுகின்றது.

இத்தகைய வறுமையானது ஆய்வுப்பிரதேசமாகிய சம்மாந்துறைப் பிரதேசத்திலும் பாரிய சவாலாக காணப்படுகின்றது. இங்கு வறுமைநிலைக்கு பிரதான காரணமாக மக்கள் தொழிலின்றி காணப்படுதல் இனங்காணப்பட்டுள்ளதுடன் மக்களின் தொழில் நடவடிக்கைகளில் ஏற்படும் நட்டங்கள் அதற்கடுத்த பிரதான காரணியாக காணப்படுகின்றது. மேலும் கடன் அழுத்தங்கள், அதிகரித்த குடும்பஅங்கத்தவரகளின் எண்ணிக்கை, குடும்பத்தலைவர்களின் இறப்புக்கள் மற்றும் சீதனம் போன்றவற்றின் காரணமாக வறுமை தோற்றம் பெறுவதாகவும் ஆய்வின் மூலம் அறியமுடிந்துள்ளது.

இத்தகைய வறுமையானது ஆய்வுப் பிரதேசத்தில் இளையோர்களின் மீதும் பெரியோர்களின் மீதும் பெரிதும் தாக்கம் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய அடிப்படை விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் சமூகத்தினால் வறியவர்கள் ஒதுக்கப்படுதல், சிறுவர்களின் பழக்கவழக்கங்கள், எண்ணங்கள் மற்றும் சிந்தனைகள் போன்றவற்றிலும் தாக்கங்கள் ஏற்படுதல், பெண்கள் தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு செல்லுதல் மற்றும் குடும்பத்தில் அடிக்கடி பிணக்குகள் ஏற்படல் போன்ற பல தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. இதற்கிணங்க இத்தகைய வறுமையின் சமூகத்தாக்கங்களை குறைத்து வறிய மக்களை எழில்பெறச்செய்வதற்குத் தேவையான விதந்துரைகளாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

- சிறுகைத்தொழில் முயற்சி விஸ்தரிப்புகளிற்கு வழங்கப்படும் கடன்கள் தொழில் விஸ்தரிப்பு தவிர இதர அடிப்படைத்தேவைகளிற்கும்

பயன்படுத்தப்படுவதனால், சிறுகைத்தொழிலாளர்களிற்கு கடன்களை வழங்க முன் இக்கைத்தொழிலாளர்களின் ஏனைய அடிப்படைத்தேவைகளை நிறைவு செய்யும் திட்டங்களை அமுல்படுத்தல்.

- தொழில் வாய்ப்பிற்காக பெண்கள் வெளிநாடு சென்ற குடும்பங்களில் காணப்படும் அதிகளவான ஆண்கள் உழைக்கும் விருப்பம் குறைந்தவர்களாக காணப்படுவதனால், தொழிலிற்கு செல்லும் ஆர்வத்தை உண்டாக்கும் வகையில் பயிற்சி நெறிகள் மற்றும் விளிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்துதல்.
- சிறு உற்பத்தி மற்றும் குடிசைக்கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வண்ணம் நுண்பாக கடனுதவிகளை வழங்கும்போது மக்களின் சுமையைக் குறைக்கும் வகையிலமைந்த நெறிமுறைகளுடனும், வட்டி வீதத்தை குறைத்தும் வழங்குதல் வேண்டும்.
- மேலும் சம்மாந்துறைப் பிரதேசம் முஸ்லீம்கள் செறிந்து வாழும் பிரதேசமாதலால் இஸ்லாமிய சட்டமுறையிலமைந்த வறுமை ஒழிப்பு முறையை அமுல் செய்தல்.
- வறுமையால் வாடும் குடும்பங்களிற்காக வருமான மூலமாக அமைந்து காணப்படும் சிறுவர்களின் கல்வியை இடையறாது பாதுகாப்பதற்காக கல்வியுடன்கூடிய தொழில் வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.
- சமூகத்தில் ஏழைகள் இழிவானவர்களாக கருதப்படும் நிலையை மாற்றும் வகையிலமைந்த சமயக்கருத்துக்கள் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகளை சம்மாந்துறை பிரதேசசெயலகத்திற்குட்பட்ட பகுதிக்குள் நடாத்துதல்.
- பொதுவாக வறுமை ஒழிப்புத்திட்டங்கள் முழுமையாக நாடுமுழுவதும் ஒரே விதமாக மேற்கொள்ளப்படுதல் தவறான விடயமாகும். ஏனெனில் பிரதேசத்திற்கு பிரதேசம், மனிதனிற்கு மனிதன், பிரதேச, சமய, இன ரீதியிலமைந்த வேறுபாடுகள் மற்றும் காலநிலை, தொழில்வாய்ப்பு, தொழில்செய்யும் முறை, பழக்கவழக்கம் என்றரீதியிலமைந்த இன்னும் பல வேறுபாடுகள் காணப்படுவதால், ஒரு குறிப்பிட்ட பரதேசத்திற்கென வடிவமைக்கப்பட்ட வறுமை ஒழிப்புத்திட்டமானது ஏனைய பல பிரதேசங்களிற்கு பொருத்தமற்றதாக காணப்படுகின்றது. எனவே, ஒரு பிரதேசத்தில் வறுமை ஒழிப்புத்திட்டத்தை செயற்படுத்த முன் அப்பிரதேசத்தின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை இனம்காணும் வகையிலமைந்த ஆய்வை மேற்கொண்டு அப்பிரதேசத்தின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களை வடிவமைப்பதே ஒரு சிறந்த வறுமை ஒழிப்புத்திட்டமாக அமைந்து காணப்படும்.

**உசாத்துணைகள்:**


1. Central Bank of SriLanka (2012) *News Survey*. Vol.33, no.1
2. Department of Census and Statistics (May 2011). *Poverty Indicators-Household Income and Expenditure Survey - 2009/10*. Vol.1, Issue-2.Ministry of Finance and Planning, Sri Lanka.
3. Divisional Secretariat (2012). *Resource Profile*. Planning Division. Divisional Secretariat. Sammanthurai.
4. Fredericton, N. B. (2006 ). *Poverty, Homelessness And Teenage Pregnancy.* First Steps Housing Project Inc. and *Evaluation Designs Ltd*, Canada. Pp: 6-9.
5. Griggs,J.& Robert Walker (2008). *The cost of child poverty for individuals and society*. Joseph Rowntree Foundation, New York.

6. Jeanne Brooks-Gunn. & Greg, J. Duncan. (1997 ). *The Effects of Poverty on Children*. The Future of Children Children and poverty.Vol. 7, No. 2 – Summer/Fall.
7. Mahmood Hasan Khan (2000). *Rural Poverty in Developing Countries,* finance and development.
8. Patrice,L., Engle Maureen,M. & Black.( 2008). *The Effect of Poverty on Child Development and Educational Outcomes.* Annals of the New York Academy of Sciences, Pp:245-247.
9. Tazoacha Francis (2001). *The Causes And Impact Of Poverty On Sustainable Development in Africa.* Available from: http://ged.u-bordeaux4.fr/SCTAZOACHA.pdf. (Accessed: 23.07.2004).
10. Zahid Shahab Ahmed.(2005).*Poverty, Family Stress & Parenting*, Pp: 1-3. Available from :http://www.humiliationstudies.org/documents/AhmedPovertyFamilyStressParenting.pdf.(Accessed: 07.08.2010).